**புத்தளம் மாநகர சபை - 2023**

---

**நிதிக் கூற்றுக்கள்**

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

புத்தளம் மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் மாநகர சபைகள் சட்டத்தின் (252 அதிகாரம்) ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்கர்யவு செய்யப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்தம் மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும். அச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக் கூற்றுக்கள், விதிகள் மூலம் குறிப்பிடக்கூடிய வகையில் காலப்பகுதியில் அந் நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக் கூற்றுக்கள் உரிய நேரத்திற்கு தயாரித்தல் இடம்பெறுவதாக உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டும்.

**1.3 புத்தளம் மாநகர சபையை கூட்டிணைத்தல் மற்றும் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

2022 செப்டம்பர் 6 ஆம் திகதிய 2296/05 ஆம் இலக்க அதிவிசேட வத்தமானி பத்திரத்தின் மூலம் உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைகள் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரால் 2023 மார்ச் 19 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் புத்தளம் மாநகர சபை கலைக்கப்பட்டு 2023 மார்ச் 20 ஆம் திகதி முதல் புத்தகம் மாநகர சபை கூட்டிணைத்து அத்திகதியில் உறுப்பினர்களின் பதவிக்காலம் செயற்படும் திகதியாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் மாநகர சபைக் கட்டளை சட்டத்தின் 09 ஆம் பிரிவின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை தெரிவு செய்யப்படாமல் இருந்த போதும் சபை அத்திகதியில் கூட்டிணைக்கப்பட்டதாக கருத்திற்கொள்ளப்படும். எவ்வாறாயினும் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 170(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாநகர ஆணையாளர் ஒருவரை நியமித்தலும் மேற்கொள்ளாமல் தொடர்ந்தும் புத்தளம் நகர சபையின் பெயரிலேயே நிர்வாக நடவடிக்கைகள் நடத்திச் செல்லப்பட்டு இருந்தன. மேலும் மாநகர சபையால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டு இவ்வறிக்கை திகதி வரையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 104(1) | 2021 ஜனவரி 01 ஆம் திகதி விபத்துக்கு உட்பட்டிருந்த கெப் வண்டிக்கு ஏற்பட்டிருந்த சேதம் தொடர்பான பரிசோதனை மற்றும் அதற்கு பொறுப்பானவர்களை நிச்சயிப்பதற்காக பரிசோதனை நடத்தப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் உரிய பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 மார்ச் 20 ஆந் திகதி முதல் புத்தளம் மாநகர சபை சட்டரீதியாக கூட்டிணைக்கப் பட்டிருந்த போதும் அதற்காக மாநகர ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை | புத்தளம் மாந நகர சபை சட்டரீதியாக கூட்டிணைக்கப் பட்டிருந்த போதும் இதுவரை மனித மற்றும் பௌதீக வளங்கள் தேவைப்பாடு பூர்த்தி செய்யப்படாமல் இருந்தமையால் மாநகர சபை ஒன்றாக செயல்படவில்லை என்பதாக | மாநகர சபை ஒன்றாக சட்டரீதியாக கூட்டிணைக்கப்பட்டுள்ள தால் விரைவில் மாநகர சபை ஒன்றாக செயற்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | 176 கடைகளுடன் கூடிய வியாபார தொகுதியொன்று 540 நாட்கள் மற்றும் ரூபா 337,750,000 பெறுமதியில் நிர்மாணிற்பதற்கு 2015 ஜூன் 10 ஆம் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டு பின்னர் 2017 ஆகஸ்ட் 03 ஆம் திகதி மீண்டும் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது ஒப்பந்தக்காரரின் வேண்டுகோளின் பிரகாரம் 2019 ஒக்டோபர் 10 ஆம் திகதி எதிர்வரும் எஞ்சிய 540 நாட்கள் மற்றும் ரூபா ரூபா 437,500,100 பெறுமதிக்கு ஒப்பந்த உடன்படிக்கை மீண்டும் திருத்தம் செய்யப்பட்டு இருந்தது. வியாபார தொகுதியை நிர்மாணிப்பதற்கு தேவையான பணத்தை வழங்குதல் உத்தேச கடைகளை கொள்வளவு செய்பவர்களிடம் இருந்து முற்பணமாக அறவிடுவதன் மூலம் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் 2023 நவம்பர் வரையில் 155 கொள்வனவாளர்களிடமிருந்து மொத்த முற்பணத்தையும் அறவிடுவதற்கு தவறி இருந்ததுடன் உரிய பணத்தை 21 கொள்வனவாளர்களிடமிருந்து மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. நிர்மாணத்திற்காக மதியுரை சேவைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்கான செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 22,463,610 ஆக இருந்த போதும் 06 ஆண்டு காலமாக நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய | தற்போது பொதுச் சபை கலைக்கப்பட்டுள்ள தால் சபையினால் இறுதியாக எடுத்த தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு மொத்த முற்பண பெறுமதியில் 1/3 இற்கு குறைவாக செலுத்தியுள்ள கடை அறைகளுடன் செய்யப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை செல்லுபடியற்றதாக்கி மீண்டும் கேள்வி கோருதல் இடம் பெற்றுள்ளது. | விரைவில் வியாபார கடை தொகுதியை நிர்மாணித்து நலன்களை பொது மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| முடியாமல் இருந்ததுடன் 2023 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் நிர்மாணங்களின் பௌதீக செயல் முன்னேற்றம் 60 சதவீதம் மட்டத்தில் காணப்பட்டது. எனினும் நிர்மாணத்திற்காக செலவிடப்பட்டிருந்த தொகை ரூபாய் 512,805,987 ஆக இருந்ததுடன் ஒப்பந்தக்காரர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் பட்டியல் கொடுப்பனவு தாமதத்தினால் ரூபா 3,558,259 ஆன தாமத வட்டி ஒன்றை செலுத்த நேர்ந்தது. | | |
| (இ) 74 கடை அறைகளுடன் கூடிய வர்த்தக தொகுதியொன்றை நிர்மாணித்தல் 2022 திசெம்பர் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு தேவையான நிதியத்தை 29 கடைகளை கேள்வி கோரி தெரிவு செய்யப்பட்ட கொள்வனவாளர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற முற்பணத் தொகை மூலமும் பழைய வர்த்த தொகுதியை அகற்றும் போது கடைகளை இழந்த 45 பேருக்கு புதிதாக வழங்கும் கடைகளில் இருந்து அறவிடப்படும் ரூபா 1,800,000 தொகையுடன் அறவிடுவதற்கு எதிர்பார்த்த மொத்தத் தொகையான ரூபா 195,220,644 ஆக இருந்தது. கேள்வி கோரப்பட்ட 29 கடைகளில் 25 மாத்திரம் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் கடைகளை இழந்தவர்களுக்கு விற்பனை செய்வதற்கு இருந்த 45 கடைகளில் 04 கடைகள் மாத்திரம் விற்பனை செய்யப்பட்டிருந்தன. 2023 நவம்பர் வரையில் அறவிடப்பட்டிருந்த மொத்த விற்பனை பெறுமதி ரூபா 42,915,000 தொகை மாத்திரமாக இருந்தமையால் மேலும் ரூபா 152,305,646 ஆன விற்பனைகளை மேற்கொள்வதற்கு எஞ்சியிருந்தன. முற்பணத் தொகை அறவிடுவது பலவீனமான மட்டத்தில் காணப்பட்டமை, திட்டமிடப்பட்ட பிரகாரம் கடைகளை விற்பனை செய்ய தவறியமை காரணமாக வர்த்தக தொகுதியின் நிர்மாண நடவடிக்கைகள் தொடர்ந்தும் தாமதமாகி இருந்ததுடன் 2023 நவம்பர் வரையில் | செயற்திட்டத்தின் எஞ்சிய நிர்மாண நடவடிக்கைகளை உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் அங்கீகாரத்துக்கு உட்பட்டு கேள்வி கோரி வழங்கி நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | விரைவில் வியாபார கடை தொகுதியை நிர்மாணித்து நலன்களை பொது மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

நிர்மாணிக்கப்பட்ட நிர்மாணங்களின் பௌதீக செயல் முன்னேற்றம் 11 சதவீதம் போன்ற குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

## 2.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புத்தளம் நகர சபைக்குரிய மீன் விற்பனை நிலையங்களை குத்தகைக்கு வழங்கி பின்னைய காலங்களில் அவை இடமாற்றப்பட்டிருந்ததுடன் அதில் 36 வியாபார நிலையங்களுக்காக ரூபா 900 வீதம் வாடகை ஒன்று அறவிடப்பட்டிருந்ததுடன் எப்போதிருந்து அவை அறுவிடப்பட்டது என்பதற்கான தகவல்கள் காணப்படவில்லை. அந்த வியாபார நிலையங்களுக்காக உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்படாமல் விற்பனை செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதி குளிரூட்டியுடன் பேணி செல்லப்பட்ட அந்த வியாபாரம் நிலையங்களின் மாதாந்த மின்பட்டியல் சபையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. பரிசோதனைக்கு உட்பட்ட 2023 பெப்ரவரி முதல் ஒக்டோபர் வரை 9 மாத காலப்பகுதிக்காக செலுத்தப்பட்ட மின்சாரப் பட்டியலின் பெறுமதி ரூபா 1,381,054 ஆக இருந்ததுடன் அக்காலப்பகுதிக்கு 36 வியாபார நிலையங்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்த வாடகை வருமானம் ரூபா 291,600 மாத்திரமாக இருந்தது. அறவிடப்பட்ட வாடகை வருமானத்தை மிகைத்து மீன் விற்பனை நிலையங்களின் மின்சார சதவீதத்திற்காக சபையினால் ரூபா 1,089,454 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தற்காலிக கடை களுக்காக கோவை களை நாளாது வரையாக்குவதற்கும் உடன்படிக்கையை தயாரிப்பதற்கும் உரிய நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | கேள்வி கோரி முறையான உடன்படிக்கையை மேற்கொண்டு கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் வருமானத்தை அதிகரித்துக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் |
| (ஆ) | 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை வீதவரி திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் நகர சபை அதிகார பிரதேசத்தில் 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் வீதவரி அறவிடப்பட்டு வந்தது. | கட்டிட மதிப்பீடு நடவடிக்கைகளுக்காக மதிப்பீட்டு திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | உரிய காலத்துக்கு ஏற்றவாறு வீதவரி மீள் திருத்தம் செய்யப்பட்டு கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஓய்வு பெற்ற 95 உத்தியோகத்தர்களிடமிருந்து 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 179,694 ஆன கடன் மீதிகள் காணப்பட்டன. | அக்கடன் மீதிகளை பதிவழிப்பதற்கு அனுமதி கோரி உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ளதாக | அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான கட்டிடங்கள் உடனான காணியில் சபையால் உடைமை கொள்ளப்பட்டு நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செய்யப்படும் விளையாட்டு அரங்குகள், சனசமூக மண்டபங்கள், வாரச் சந்தைகள், நூலகங்கள், சிறுவர் பூங்காக்கள் சிகிச்சை நிலையங்கள் போன்ற 50 சொத்துக்களின் சட்டரீதியான உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | புத்தளம் நகர சபையால் உடமை கொள்ளப்பட்டுள்ள அரசுக்கு சொந்தமான அனைத்து காணிகளின் சட்டரீதியான உரித்தை யையேற்பதற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக | சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பொருள் மெய்மையாய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்த 157 பொருள் பற்றாக்குறை தொடர்பாக 2023 நவம்பர் 24 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | பற்றாக்குறை காணப்பட்டால் மிகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பொருட் பற்றாக்குறை இனங்கண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் |

**2.4 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இரண்டாம் தரத்தின் பதவிகளில் 33 வெற்றிடங்களும் ஆரம்ப தரத்தின் பதவிகளில் 50 வெற்றிடங்களும் காணப்பட்டன | வெற்றிடங்கள் காணப்படுவதால் நகர சபையின் நடவடிக்கைகளை அமைய ஊழியர்களைக் கொண்டு மேற்கொள்வதாக | பதவியணியினர் தேவைப்பாடு காலரீதியாக மீளாய்வு செய்யப்பட வேண்டும் |

**3. கணக்களி தன்மையும் நல்லாளுகையும்**

**3.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் நி.பி 133(1) பிரிவின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு, நிறுவனத்தின் தொழிற்பாட்டு | எதிர்காலத்தில் இது தொடர்பாக மேலும் கவனம் செலுத்து வதற்கு நடவடிக்கை | நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கை களையும் மேவுகை செய்யப்படும் வகையில் போதியளவு உள்ளக் |

| | | |
|---|---|---|
| செயற்பாட்டை மேம்படுத்துதல் மற்றும் செயலாற்றலை மேம்படுத்துவதற்காக ஒத்துழைக்கும் செயற்பாடு ஒன்று செயல்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் சபையில் உள்ளக கணக்காய்வினால் ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கேள்வி கோரல் பரிசோதனை, சிறாப்பர் பணப் பெறுவனவு, கொடுப்பனவு மற்றும் வங்கியிடல் போன்ற பரிசோதனைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டு 2023 ஆம் ஆண்டிற் கு 02 கணக்காய்வு விசாரணைகள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | எடுப்பதற்கு முயற்சி செய்வதாக | கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் |

**3.2 நிலையான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 இற்காக அடையப்பட வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகளுக்காக சபையினால் மீளாய்வாண்டில் 06 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்கான இலக்குகளை இனங்காணப்பட்டிருந்த போதும் அதில் ஒரு நோக்கம் மாத்திரம் மாத்திரம் செயற்படுத்தப் பட்டிருந்தது. | மீளாய்வாண்டுக்காக 06 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங் காணப்பட்டு இருந்த போதும் நாட்டில் காணப்பட்ட அசாதாரண நிலைமை, கொரோனா தொற்று காரணமாக இனங்காணப்பட்டிருந்த 06 நோக்கங்களில் ஒரு நோக்கத்தை மாத்திரம் நிறைவேற்ற கூடியதாக இருந்ததாக | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |